மும் நிழல் அல்லது பலன் தரும் மரங்கள் நட்டு பராமரிக்கும் திட்டத்தை வனத்துறையும் மேற்கொண்டு வருகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகள் பூராவும் வரப்பாக இருக்கிறது. இந்தச் சாலைகள் பெரும்பாலும் ஆற்றின் கரையிலே அமைந்திருக்கின்றன. எனவே, ஆற்றினால் ஏற்படுகின்ற அந்த அரிப்பை தடுப்பதற்காகவும் அதே சமயத்தில் பருவ மழையைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற அந்தச் சாலைகளுடைய இருபக்கமும் மரங்களை நடும் திட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1981-82 முதல் 1985-86 வரை தமிழகத்தில் 3,028 கிலோ மீட்டர் நீளத்திற்கு இத்தகைய சாலையோரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு உள்ளன. இதைத் தவிர மற்றும் பல துறைகளின் வாயிலாகவும் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தினுடைய இரண்டாவது பகுதியிலே சுமார் 800 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலையோர மரங்கள் நடவேண்டும் என்ற திட்டமும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஏற்கெனவே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனி எதிர்காலத்திலும் இத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடங்கள்.

777—(*வினா எண் 4905) திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருப்புவனம் புஷ்பகேஸ்வரர் சௌந்தரநாயகி அம்மன் கோவிலைச் சேர்ந்த தோப்பு மற்றும் தெப்பக்குளம் தோப்பு ஆகிய இடங்களில் தனி நபர்கள் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) ஆலய நிலத்தில் நிரந்தரக் கட்டிடங்கள் கட்ட முயற்சிப்பதைத் தடுக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS